**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102102

1. District மாவட்டம் : சிவகங்கை  PS: காவல்நிலையம் ஊ.த. பிரிவு சிவகங்கை  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 03/2022  Date: நாள் 31.05.2022

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d) of PC Act. 1988

   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: IPC  Sections பிரிவுகள்: 465, 468, 471 r/w 120(B) IPC

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 21.06.2017  Date to : நாள் வரை 30.06.2017

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.05.2022  Time நேரம் : 1600 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I  Time நேரம் : 1600 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  on Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் வடக்கில் சுமார் 55 கி.மீ. தொலைவில்

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி நகர நிலவரித்திட்ட அலுவலகம், காரைக்குடி சிவகங்கை மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜெ. ராமச்சந்திரன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. ஜெகநாதவேலு

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.07.1974  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மருதுநகர், (உ.பொ) சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திருமதி. சுமதி, த/பெ. பாலாஜி சுந்தரராஜன், முன்னாள் தனி வட்டாட்சியர் நகர நிலவரித்திட்ட அலுவலகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.
   2. திரு. த. உதயகுமார் (தனிநபர்), த/பெ. தவராஜ், க.எண் 148/2. கீழ்மேல மற்றும் அஞ்சல், சிவகங்கை தாலுகா (மற்றும்) மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   After completion of Preliminary Enquiry

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed N.P. Jesudoss Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Sivaganga on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 31.05.22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.05.2022 at 2100hrs

Name: பெயர் K.RAMACHANDRAN
Rank: நிலை DSP No. எண் ..........
V&AC, VIRUDHUNAGAR,
(I/c) SIVAGANGA

**சிவகங்கை சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு சட்டம்(திருத்தம்)–2018 நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

நான் இன்று 31.05.2022 மாலை 16.00 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.SP.D.கருப்பையா என்பவரின் 17.05.2018 நாளிட்ட மனு அடிப்படையில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் மு.வி.205/2018/REV/SG, நாள்.20.07.2018–இன்படி, காலம்–7–இல் கண்ட குற்றச்சாட்டு அலுவலர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பான முதனிலை விசாரணையின் தொடர்ச்சியாக, இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்களின் குறிப்பாணை எண. PE.205/2018/REV/SG, Dt:09.05.2022–இன்படி காலம் 7–இல் கண்ட குற்றச்சாட்டு அலுவலர்கள் இருவர் மீதும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2022, 13 (2) உ/இ 13 (1) (d) ஊழல் தடுப்பு சட்டம், 1988 மற்றும் சட்டப்பிரிவுகள் 465, 468, 471 உ/இ 120 (B) இந்திய தண்டனை சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கின் குற்ற விவரம் பின்வருமாறு:

குற்றச்சாட்டு அலுவலர்–(1) திருமதி.சுமதி என்பவர் 13.08.2015–ஆம் தேதி முதல் 30.06.2017–ஆம் தேதி வரை சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகர நிலவரித்திட்ட அலுவலகத்தில் தனிவட்டாட்சிராக பணிபுரிந்துள்ளார். குற்றச்சாட்டு அலுவலர்–(2) திரு.உதயகுமார என்பவர் தனிநபர் ஆவார்.

நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் நில உரிமைதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் சம்மந்தப்பட்ட வருவாய் கணக்குகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்தும், அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளின் அடிப்படையிலும் விளாவாரியான ஆணையை நிலவரித்திட்ட வட்டாட்சியர் பிறப்பிக்க வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்ட உத்தரவினை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெற்று வழக்குக் கோப்பில் சேர்க்க வேண்டும். அவ்வுத்தரவுகள் குறித்த விபரங்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் முறைப்படி பதிவு செய்யப்பட வேண்டும். சார் ஆய்வாளர் எஸ்.எப்.1 (Survey Form) மற்றும் எஸ்.எப்.7 (Survey Form) பதிவேட்டில் உள்ள ஒவ்வொரு புலமும் நிலவரித்திட்ட ஆய்வாளர் / சார் ஆய்வாளரால் விடுபாடின்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டு, எஸ்.எப்.1 பதிவேட்டில் கலம் 10, 11, 12 மற்றும் எஸ்.எப்.7 பதிவேட்டில் கலம் 8, 9, 10 ஆகியவற்றில் உரிய விவரங்கள் எழுதப்பட்டு ஒப்பமிட வேண்டும். நிலவரித்திட்ட வட்டாட்சியர் அனைத்து நகர புல எண்களையும் பார்வையிட்டு எஸ்.எப்.1 மற்றும் எஸ்.எப்.7 பதிவேடுகளில் உரிய காலங்களில் குறிப்புகள் எழுதி ஒப்பமிட வேண்டும். நிலவரித்திட்ட வட்டாட்சியரின் களப்பணியின்போது முடிவு செய்யப்பட்ட மாறுதல்கள் அடிப்படையில் கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிக்கு நியமிக்கப்படும் நிலவரித்திட்ட வட்டாட்சியர், உதவி நிலவரித்திட்ட அலுவலர் ஆகியோரது அறிவுரை மற்றும் வழிகாட்டுதல் படியும் அரசாணை எண்.1D, 103 வருவாய்த்துறை எஸ்.எ–11(i) துறை நாள் 01.03.2007 அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படியும், எவ்வித குறைபாடுகளுமின்றி பணியினை அரசு குறியீடு செய்மான அடிப்படையில் பணியாற்றி உரிய காலத்திற்குள் முடிக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மாநகராட்சி / நகராட்சி பகுதிகளில் உள்ள

தீர்வை ஏற்படுத்தப்பட்ட தரிசு / தீர்வை ஏற்படுத்தப்பட்ட மனை ஆகியவற்றில் கைப்பற்றுதாரர்களின் உரிமை நிரூபிக்கப்பட்டால் அவைகள் உட்பிரிவுகள் செய்யப்பட்டு உரிமையாளர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட வேண்டும். வருவாய்த்துறையினரால் ஒப்படை செய்யப்படாத உடைமைகளின் உரிமையை நிர்ணயிக்கும்போது சம்பந்தப்பட்ட தனிவட்டாட்சியர் இந்த அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்ட நாளுக்கு முன் அந்த உடைமையில் உள்ள 30 வருட அனுபவத்தினை சரிபார்த்து உரிமையை நிர்ணயிக்க வேண்டும். இதனை இதன்பொருட்டு வாய்மொழி மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலான ஆதாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். தனிவட்டாட்சியர் ஒவ்வொரு வழக்கின் மீதும் தன்னிலை விளக்கம் உத்தரவாக செயல்முறை ஆணை இட வேண்டும். கோவில், சர்ச், மசூதி, பள்ளி, விளையாட்டுத்திடல், பல்வேறு ஸ்தாபனங்கள், பூங்கா முதலியன அடையாளம் காணப்பட்டு அவ்வாறே பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். சாலைகள் மற்றும் பொது சேவைகளுக்காக அமைக்கப்படும் நிலங்கள் நில உடைமை மாற்றங்களுக்கு ஏற்ப, முறையே வருவாய் வாரிய நிலை எண்கள் 26ஏ, 31 மற்றும் 33 ஆகியவற்றின் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதி கடைபிடிக்கப்படும். தனிவட்டாட்சியர் பட்டா மாறுதல் வழங்கும்போது அ–பதிவேடு / சிட்டா, நகரளவை பதிவேடு (**TSLR**) மற்றும் **S.F.1**, கிரையப்பத்திரங்கள், பாகப்பிரிவினை பத்திரங்கள், பதிவு செய்யப்பட்ட இதர பத்திரங்கள், வாரிசு சான்று (தேவைப்பட்டால்) ஆகியவற்றை சரிபார்த்து பட்டா மாறுதல் வழங்க வேண்டும். வருவாய் பதிவேடுகளில் பதிவுகளை இந்நாள்வரை சரிசெய்தலே வருவாய் பின்தொடர்பணியின் முதன்மை நோக்கம். நகரளவை இறுதித்தணிக்கை பணிக்கும் தற்போதைய வருவாய் பின்தொடர்பணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பதிவுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. ஆகையால் வருவாய் பின்தொடர்பணியின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் பகுதியிலுள்ள ஒவ்வொரு புலத்தினையும், களப்பணியாளர்கள் தணிக்கை செய்து நில உரிமையாளர்கள் பெயர்களை முறையான விசாரணைக்குப் பின்னர் இறுதித் தணிக்கை பணி நிலப்பதிவேட்டில் பதிய வேண்டும். ஒவ்வொரு புலமும் தொடர்புடைய கிளை நிலவரித்திட்ட அலுவலகத்திலுள்ள நிலவரித்திட்ட துணை வட்டாட்சியர் தகுதிக்கு குறைவில்லாத அலுவலரால் மேல்தணிக்கை செய்யப்பட்டு நிலப்பதிவேட்டில் தணிக்கை அலுவலரின் குறிப்புரையை பதிவு செய்ய வேண்டும். சம்பந்தப்பட்ட நிலவரித்திட்ட உதவி அலுவலரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளின் 10 (பத்து) சதவீதத்திற்கு குறைவில்லாமல் அந்தந்த நிலவரித்திட்ட உதவி அலுவலரால் மேல்தணிக்கை செய்யப்படும். மேற்படி விதிமுறைகளை தனிவட்டாட்சியர் பட்டா மாறுதல் வழங்கும்போது பின்பற்றப்பட வேண்டும்.

காரைக்குடி சர்வே வார்டு எண்.3, பிளாக் எண்.10, டி.எஸ்.எண்.485ல் அமைந்துள்ள 27,129 ச.அடி பரப்பளவுள்ள இடம் முழுவதும் காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான இடமாகும். கடந்த 15.05.1950–இல் அப்போதைய சர்வே வார்டு எண்.3, பிளாக் எண்.1, நகரளவு எண்.3ல் மொத்தம் 75,000 ச.அடி பரப்புள்ள நிலத்தினை காரைக்குடி நாட்டார்களின் ரிசீவர் திரு.சௌமியநாராயணன் அய்யங்கார் அவர்களால் ஆவண எண்.743/50–இன்படி பதிவு செய்து தானமாக காரைக்குடி நகராட்சிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆவண எண்.743/1950 என்ற தானப்பத்திரம் 12.05.1950 அன்று எழுதப்பட்டு, 15.05.1950 அன்று காரைக்குடி 2 எண் இணைசார்பதிவகத்தில் தாக்கல் செய்யப்பட்டு 16.05.1950 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது காரைக்குடி முனிசிபல் லிமிட் டவுன் சர்வே வார்டு 3ல் டி.எஸ்.நிர்.3 மற்றும் டி.எஸ்.நிர

380, 381, 382, 383, 384, 385, 386, 387, 388, 389, 390, 391 – ஆகிய சர்வே எண்களில் உள்ள காரைக்குடி நாட்டார்களுக்கு பாத்தியப்பட்ட மொத்தமாக உள்ள பொதுச்சொத்தை தேவகோட்டை சப்கோர்ட் உத்திரவின்படி திரு.R.சௌமியநாராயண அய்யங்கார் அவர்கள் கோர்ட் வழிகாட்டுதலின்படி மொத்தமாக உள்ள சொத்துக்களை லே அவுட்டாகப்பிரித்து ஒவ்வொருவருக்கும் தனித்தனி சொத்துக்களாக பிரித்துக் கொடுப்பதற்காக லே அவுட் செய்து அதற்கு வரைபடம் தயார் செய்து அதனை காரைக்குடி நகராட்சியில் ஒப்படைத்திருக்கிறார். அந்த வரைபடத்தில் கண்டபடி காரைக்குடி நகராட்சிக்கு தானமாக எழுதிகொடுக்கப்பட்ட இடங்களின் அடையாளங்கள், அளவுகள், எல்லைகள் குறிப்பிட்டு மொத்தம் 21 இலக்க சொத்துக்கள் தானமாக காரைக்குடி நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி தானபத்திரம் சம்மந்தமாக ஆவண எண்.744/1950–இன்படி உடன்படிக்கை (Agreement) பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. காரைக்குடி முனிசிபல் லிமிட் டவுன் சர்வே வார்டு 3ல் டி.எஸ்.நிர.3 மற்றும் டி.எஸ்.நிர 380 part, 381, 382, 383, 384, 385, 386, 387, 388, 389, 390 – ஆகிய சர்வே எண்களில் உள்ள மேற்படி சொத்துக்களை தேவகோட்டை சப்கோர்ட் உத்திரவின்படி திரு.R.சௌமியநாராயண அய்யங்கார் அவர்கள் காரைக்குடி நாட்டார்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களில் உள்ள பொது இடங்களைப்பொறுத்து, காரைக்குடி நாட்டார் எஸ்டேட் ரிசீவர் என்ற முறையில் கோர்ட் வழிகாட்டுதலின்படி மொத்தமாக உள்ள சொத்துக்களை லேஅவுட்டாக பிரித்து ஒவ்வொருவருக்கும் தனித்தனி சொத்துக்களாகப்பிரித்து கொடுப்பதற்காக லேஅவுட் பிளான் அப்ரூவல் வாங்க வேண்டும். இதுதொடர்பாக காரைக்குடி நகராட்சியில், நகர் அபிவிருத்தி திட்டத்தின்படி லேஅவுட் பிளான் அப்ரூவல் செய்வதற்குரிய சட்டவிதிகள் குறித்து கோர்ட் ரிசீவர் திரு.சௌமிய நாராயண அய்யங்கார் அவர்கள் காரைக்குடி நகராட்சி நிரவாகத்திடம் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார். காரைக்குடி முனிசிபல் லிமிட் டவுன் சர்வே வார்டு 3ல் பொய்சொல்லா மெய்யர் தெருவில் 09.07.2016–இன்படி வழிகாட்டி மதிப்பு சதுர மீட்டர் 1க்கு ரூ.9380/–. அதன்படி மேற்படி T.S.No.485ல் உள்ள சொத்து மதிப்பு ரூ.2,36,41,914/– ஆகும். 1960ம் ஆண்டில் நடைபெற்ற ரீ–சர்வேயில் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட 75,000 ச.அடி இடம் சர்வே எண்.3 பகுதி இரண்டு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு சர்வே வார்டு எண்.3, பிளாக் எண்.1, நகரளவு எண்.484 பகுதி, 486 பகுதி மற்றும் வார்டு எண்.3, பிளாக் எண்.10, நகரளவு எண்.3 மற்றும் 4 என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நகரளவு எண்கள் 484 பகுதி, 486 பகுதி மற்றும் 3 ஆகியவை தெருக்கள் என்றும் சர்வே எண்.485 மட்டும் திரு.SMARM.அருணாச்சலம் செட்டியார் பெயரில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. மேற்படி காரைக்குடி டவுன் T.S.No.485ல் உள்ள இடத்தில் ஓம் ஆதிபராசக்தி இராஜராஜேஸ்வரி சக்தி பீடம் ஆக்கிரமிப்பு உள்ளது. இக்கோயிலினை திரு.R.கணேசன் என்பவர் நிரவகித்து வருகிறார்.

மேற்படி திருக்கோயில் உள்ள காரைக்குடி T.S.No.485 இடமானது SM.AR.M.அருணாசலம் செட்டியார் பெயரில் உள்ளது எனவும், இந்த இடத்தை அவர் எப்படி பெற்றார் என்ற விபரம் தனக்குத் தெரியாது எனவும், அருணாசலம் செட்டியார் மேற்படி இடத்தை திருக்கோயிலுக்கு அர்பணித்துவிட்டதாகவும், இதுகுறித்து ஆவணங்கள் எதுவும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை. 2002ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8 மற்றும் 9

தேதிகளில் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி சர்வே எண்.485–இல் தற்காலிக கீற்றுக் கொட்டகை அமைத்து செயல்பட்டு வந்த அனைத்து காய், கனி கடைகளையும் கட்டப்பட்டு பயன்படுத்தாமல் இருந்த வணிக வளாகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 10.08.2002 அன்று தற்காலிக கடைக்காரர்களால் காலி செய்த பகுதியில் இருந்த கீற்றுக் கொட்டகை மற்றும் கூரைகளை அகற்றி மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு இடத்தைச்சுற்றி முள்வேலி கம்பி அமைக்கப்பட்டு நகராட்சிக்கு சொந்தமான இடம் என்பதற்கு அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 14.08.2002 அன்று காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எச்.ராஜா தலைமையில் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்ற நிர்வாகத்தினரால் நகராட்சி மூலம் அமைக்கப்பட்ட முள்வேலி அகற்றப்பட்டு நகராட்சி அறிவிப்பு பலகை சேதப்படுத்தப்பட்டது தெரிய வந்ததும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி காரைக்குடி காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு புகார் செய்யப்பட்டுள்ளது. காரைக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை சேதப்படுத்தியது குறித்து நகரமன்றம் தனது தீர்மானம் எண்.364, நாள்.16.08.2002ல் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 14.11.2002ம் தேதிய நாளிதழில் பிரச்சினைக்குரிய ஆதிபராசக்தி கோயில் இடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் என்பது குறித்து அப்போதைய காரைக்குடி நகராட்சி ஆணையர் நாளிதழில் அறிக்கை வெளியிட்டுள்ளார். பழைய சர்வே எண். மற்றும் புதிய சர்வே எண் ஆகியவற்றிற்கான ஒப்புநோக்கு பட்டியலை சரிபார்க்கப்பட்டதில் சர்வே எண்.485 நகராட்சிக்கு சொந்தமானது என்பது உறுதி செய்யப்பட்டது என தெரிய வருகிறது. இதனை தொடர்ந்து 1999ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டதை ரத்து செய்யும்படி காரைக்குடி வட்டாட்சியருக்கும், 1960ம் ஆண்டு ரீ–சர்வேயில் சர்வே எண்.485 திரு.எஸ்.ஆர்.எம்.அருணாசலம் செட்டியார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதை ரத்து செய்து நகராட்சி பெயருக்கு மாற்றம் செய்து தரும்படி சென்னை, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் அவர்களுக்கு ந.க.எண்.10207/2002/எப்2, நாள்– 24.08.2002 மற்றும் 30.10.2002–இல் கடிதங்கள் காரைக்குடி நகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது. காரைக்குடி நகராட்சி ஆணையர் அலுவலக கடிதம் ந.க.எண்.10207/2002/எப்2–இன்படி காரைக்குடி நகராட்சி, வார்டு 3, பிளாக் 10, நகரளவை எண்.485ஐ காரைக்குடி நகராட்சி பெயரில் பட்டா மாறுதல் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலருக்கு 09.01.2009 மற்றும் 16.07.2010 தேதிகளிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், காரைக்குடி நகர புல எண் உட்பிரிவு 485, 0.2520.50 பரப்பளவு கொண்ட ர.மனை சம்மந்தமாக நகராட்சிகளில் வருவாய் பின் தொடர் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்தின் கீழ் SR.7286/2015-இன்படி 16.11.2015 அன்று திரு.SMARM.அருணாசலம் செட்டியார் என்பவருக்கு படிவம்–1ல் விசாரணை அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. SF-1 (Survey Form) பதிவேட்டில் கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்கள் 25.11.2015 தேதியிட்டு மேற்படி பட்டா நிலத்தில் கோவில் மற்றும் தகர கொட்டகை, தார்சு கட்டிடம் உள்ளதாக குறிப்பிட்டு கையொப்பம் செய்துள்ளார். 25.11.2015 அன்று SMARM. அருணாசலம் செட்டியார் பெயரிலேயே மேற்படி இடத்திற்கு பட்டா வழங்கி கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

காரைக்குடி, கழனிவாசல், நாராயணன் செட்டியாரின் மனைவி செந்தாமரை என்பவர், தனது கணவருக்கு முத்தையா செட்டியார் மகன் அருணாசலம் செட்டியார் அவர்கள் 18.07.1999ல் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றும், மேற்படி அருணாசலம் செட்டியாரும், செந்தாமரை தனது கணவர் நாராயணன் செட்டியாரும் இறந்துவிட்டார்கள் எனவும், தனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தரும்படி 24.02.2017 அன்று காரைக்குடி நகர நிலவரித்திட்ட வட்டாட்சியர் அவர்களுக்கு செந்தாமரையால் மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. செந்தாமரை அவர்களுக்கு வாரிசு இல்லை. கு.சா.அ.(2) திரு.த.உதயகுமார், த/பெ.தவராஜ், கதவு எண்.148/2, கீழகோட்டை மற்றும் அஞ்சல், சிவகங்கை தாலுகா, சிவகங்கை மாவட்டம் என்பவர் மேற்படி செந்தாமரையை கவனித்து வந்துள்ளார். மேற்படி கு.சா.அ.(2) திரு.உதயகுமார் என்பவர் செந்தாமரை சார்பாக பட்டா மாறுதல் தொடர்பான வேலைகளை செய்துள்ளார். மேற்படி பட்டா மாறுதல் கோரிய மனுவுடன், AR.M.M.அருணாசலம் செட்டியார் அவர்களின் பதிவு செய்யப்படாத உயில் சாசனம் நாள்–18.07.1999, லெ.பழ.நாராயணன் செட்டியார் அவர்களின் இறப்புச்சான்று நாள்–12.08.2016, வாரிசு சான்று, 01.01.1987 முதல் 14.05.2017 வரையிலான வில்லங்க சான்று ஆகியவை இணைக்கப்பட்டுள்ளது. திரு.AR.M.M.அருணாசலம் செட்டியார் அவர்கள் யாருக்கும் உயில் எழுதி வைக்கவில்லை. அவரது குடும்ப உறுப்பினர்களை பற்றி அரைகுறையாக தெரிந்து வைத்துக்கொண்டு திரு.AR.M.M.அருணாசலம் செட்டியார் உயில் எழுதி வைத்தது போல ஒரு போலியான உயிலை உருவாக்கியும், காரைக்குடி நகர நிலவரித்திட்ட (Town Settlement) தனிவட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து மேற்படி பட்டாமாறுதல் சம்மந்தமாக எந்தவிதமான அறிவிப்பு கடிதமும் அவரது குடும்பத்தாரிடம் கொடுக்காமல், எந்தவிதமான விசாரணையும் செய்யாமல் தனிவட்டாட்சியரான கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்கள், சார் ஆய்வாளர் திரு.பாஸ்கர் அவர்களிடம் மேற்படி மனுவில் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்து அறிக்கை எழுதிக்கொடுக்குமாறு தெரிவித்துள்ளார். அதற்கு சார் ஆய்வாளர் திரு.பாஸ்கர், பட்டா மாறுதல் கோரிய மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த உயிலானது பதிவு செய்யப்படாமல் இருந்ததை தனிவட்டாட்சியரான கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்களிடம் காண்பித்து கேட்டதற்கு, கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவரிடம், அந்த இடத்தில் அனுபவம் செய்து வருவதை அடிப்படையாகக்கொண்டு Settlement தாசில்தார் பட்டா மாறுதல் வழங்கலாம் என தெரிவித்ததன்பேரில் சார் ஆய்வாளர் பாஸ்கர் காரைக்குடி நகர T.S.No.485க்கு செந்தமாரை பெயரில் பட்டா மாறுதல் வழங்க பரிந்துரை செய்து 21.06.2017 அன்று அறிக்கை சமர்பித்துள்ளார். தனிவட்டாட்சியரான கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்கள் மேற்படி பதிவு செய்யப்படாத போலியான உயிலினை ஆதாரமாகக்கொண்டு, திருமதி.செந்தாமரை பெயரில் எஸ்.ஆர்.எண்.7286/2015, நாள் 21.06.2017–இன்படி பட்டா மாறுதல் வழங்கியுள்ளார். மீண்டும் அதே இடத்திற்கு போலியான ஆவணங்களை கொண்டு கு.சா.அ.(2) திரு.உதயக்குமார் தனது பெயருக்கு பட்டா மாறுதல் கோரி 28.06.2017 அன்று மனு செய்தபோதும், முறையாக விசாரணை செய்யாமல் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து 30.06.2017 அன்று கு.சா.அ.(2) திரு.உதயக்குமார் பெயருக்கு கு.சா.அ.(1) திருமதி.சுமதி பட்டா மாறுதல் வழங்கியுள்ளார். பின்னர் கு.சா.அ.(2) திரு.உதயகுமார், திருப்பூர் மாவட்டம், திருப்பூர், கரைப்புதூர், பல்லடம், அருள்புரம், ஜெயசக்திநகர், கதவு எண்.8/598–இல் வசித்து வரும் திரு.ரோசாலை அவர்களின் மகன் திரு.லெனின் என்பவரை மேற்படி இடத்திற்கு பவர் ஏஜெண்டாக நியமித்துள்ளார். இந்நிலையில்,

கு.சா.அ.(1) திருமதி.தி.சுமதி அவர்களால் காரைக்குடி நகரளவு எண்.485க்கு உதயகுமார் பெயரில் வழங்கிய பட்டா மாறுதலினை ரத்து செய்திடகோரி 18.07.2018 அன்று ந.க.எஸ்.ஆர்.7286/2015–1– இன்படி சென்னை, உதவி நில வரித்திட்ட அலுவலருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

தனிவட்டாட்சியரான கு.சா.அ.(1) திருமதி.சுமதி அவர்கள் போலியான ஆவணங்கள் என்று தெரிந்தும் போலியான ஆவணங்களை ஆதாரமாகக்கொண்டு திருமதி.செந்தாமரை பெயரிலும், கு.சா.அ.(2) திரு.உதயகுமார் பெயரிலும் பட்டா மாறுதல் செய்துள்ளார். அதவாது, கு.சா.அ.(1) திருமதி.சுமதி காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமானதும், காரைக்குடி T.S.No.485-இல் உள்ள ரயத்து மனையிடத்தை போலியான ஆவணங்களை ஆதாரமாகக்கொண்டு, முறையான விசாரணை செய்யாமலும், யாரிடமும் எழுத்துப்பூர்வமாக எந்தவொரு வாக்குமூலமும் பெறாமலும், கு.சா.அ.(2) திரு.உதயகுமாருடன் கூட்டுச் சேர்ந்து, கு.சா.அ.(2) திரு.உதயகுமார் பெயருக்கு பட்டா மாறுதல் செய்துள்ளார்.

கு.சா.அ.(1) திருமதி.சுமதி ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(c)ன் படி பொது ஊழியர ஆவார். மேற்படி கு.சா.அ.(1) மீது குற்ற வழக்கு பதிவு செய்ய பிரிவு 17(A) ஊழல் தடுப்பு திருத்தச்சட்டம், 2018ன் படி மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து Roc.A1/11620/2021, dated 22.11.2021 பிரகாரம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, கு.சா.அ.(1) திருமதி.தி.சுமதி, முன்னாள் தனிவட்டாட்சியா், நகர நிலவரித்திட்ட அலுவலகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் அவர்கள் தனது சுயலாபத்திற்காக விதிமுறைகளை மீறி தன்னிச்சையாக பொது ஊழியர் என்ற முறையில் தன் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள சொத்தை நேர்மையற்ற முறையில் மோசடி செய்வதற்கு 21.06.2017 அன்று திருமதி.செந்தாமரை பெயருக்கு முறைகேடாக பட்டாமாறுதல் வழங்கியும், பின்னர் செந்தாமரையின் பெயரிலிருந்து 30.06.2017 அன்று கு.சா.அ.(2) திரு.உதயகுமார் அவர்களுக்கு முறைகேடாக பட்டா மாறுதல் வழங்கியும் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார். மேலும், கு.சா.அ.(2) திரு.உதயகுமார் போலியான ஆவணங்களை தாக்கல் செய்து, காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான நிலத்தை தனது பெயருக்கு பட்டா மாற்றம் பெற்றுள்ளார். ஆகையால், மேற்படி குற்றச்சாட்டு அலுவலர்கள் இருவர் மீதும் ஊழல் தடுப்பு சட்டம் 13 (2) உ/இ 13 (1) (d) மற்றும் 465, 468, 471 இ.த.ச உ/இ 120 (B) இ.த.ச சட்டத்தின்படியும் வழக்குப்பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு.SP.D.கருப்பையா என்பவரது 17.05.2018 தேதியிட்ட மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரிக்கு கொடுத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும் வைக்கப்பட்டது.

21.05.22

(கு.ராமச்சந்திரன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு,
விருதுநகர், (கூ.பொ.) சிவகங்கை.